1993 ஏப்ரல் 30]

(இ) தி.மு. க. மேடைப் பேச்சாளர் திரு. இரா. வெற்றி கொண்டான் மீதான அவை உரிமைக் குழுவின் அறிக்கை.

மாண்புமிகு பேரவைத் தலைவர்: அடுத்த தீர்மானம். மாண்புமிகு பேரவை முன்னவர் அவர்கள்.

மாண்புமிகு டாக்டர் இரா. நெடுஞ்செழியன்: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே,

''29—4—1993 அன்று சட்டமன்றப் பேரவைக்கு அளிக்கப்பெற்ற திரு. இரா. வெற்றிகொண்டான், தி.மு.க. மேடைப் பேச்சாளர் அவர்கள் மீதான உரிமை மீறல் பிரச்சினை குறித்த அவை உரிமைக் குழுவின் அறிக்கை பேரவை விதி 229(ஆ)-இன் கீழ் ஆய்வுக்கு எடுத்துக்கொள்ளப்பட வேண்டும்'' எனக் கோருகிறேன்.

மாண்புமிகு பேரவைத் தலைவர்: விவாதம் இல்லை. மாண்புமிகு பேரவை முன்னவர் அவர்களின் தீர்மானம் பேரவையின் முடிவிற்கு விடப்பெறுகிறது.

ஏற்போர் ஆம் என்க. (ஆம்)

மறுப்போர் இல்லை என்க. (இல்லை)

ஏற்போரே அதிகம் என்று கருதுகிறேன்.

ஏற்போரே அதிகம். தீர்மானம் நிறைவேறியது.

மாண்புமிகு பேரவை முன்னவர் அவர்கள்.

மாண்புமிகு டாக்டர் இரா. நெடுஞ்செழியன்: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே,

''இந்த அறிக்கையில்கண்டுள்ள பரிந்துரைகளைச் சட்டமன்றப் பேரவை விதி 229-(ஈ)-இன்படி இப்பேரவை இசைந்து ஏற்றுக்கொள்கிறது'' என்ற தீர்மானத்தை முன்மொழிகிறேன்.

பிற்பகல் 12-05

மாண்புமிகு பேரவைத் தலைவர்: மாண்புமிகு பேரவை முன்னவர் அவர்களின் தீர்மானம் பேரவையின் முடிவிற்கு விடப்பெறுகிறது.

ஏற்போர் 'ஆம்' என்க. (ஆம்).

மறுப்போர் 'இல்லை' என்க. (இல்லை.)

ஏற்போரே அதிகம் என்று கருதுகிறேன்.

ஏற்போரே அதிகம். தீர்மானம் நிறைவேறியது.

இப்பிரச்சினையில் பேரவை நிறைவேற்றிய இந்தத் தீர்மானத்தின்படி திரு. இரா. வெற்றிகொண்டான் என்பவரை உடனடியாகக் கைது செய்து ஒருமாத கடுங்காவல் தண்டனையை நிறைவேற்றுமாறு என்னுடைய வாரண்டை உடனடியாகக் காவல் துறைக்கு பேரவையின் ஒப்புதலோடு அனுப்பி வைக்கிறேன் என்பதைத் தெரிவித்துக் கொள்கிறேன்.

10. அரசினர் சட்ட முன்வடிவுகள் (ஆய்வு செய்தல்).

(அ) தமிழ்நாடு மதுவிலக்கு (திருத்தச்) சட்டமுன்வடிவு, 1993.

மாண்புமிகு பேரவைத் தலைவர் : அரசினர் சட்டமுன்வடிவுகள் ஆய்வு செய்தல்.

1993 ஆம் ஆண்டு தமிழ்நாடு மதுவிலக்கு (திருத்தச்) சட்டமுன்வடிவு (சட்டமன்றப் பேரவை சட்டமுன்வடிவு எண் 21/1993), மாண்புமிகு நிதி அமைச்சர்.

மாண்புமிகு டாக்டர் இரா. நெடுஞ்செழியன் : மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே,

''1993 ஆம் ஆண்டு தமிழ்நாடு மதுவிலக்கு (திருத்தச்) சட்டமுன்வடிவு (சட்டமன்றப் பேரவை சட்டமுன்வடிவு எண் 21/1993) @ ஆய்வுக்கு எடுத்துக் கொள்ளப் பெற வேண்டும்'' எனக் கோருகிறேன்.

மாண்புமிகு பேரவைத் தலைவர் : யாராவது கருத்துத் தெரிவிக்கிறீர்களா?

விவாதம் ஏதுமில்லை.

மாண்புமிகு நிதி அமைச்சர் அவர்களின் தீர்மானம் பேரவையின் முடிவிற்கு விடப்படுகிறது.

@29—4—1993 ஆம் நாளிட்ட தமிழ்நாடு சிறப்பு அரசிதழில் வெளியிடப்பெற்றுள்ளது.